# 4. காப்பியங்கள்

உலகிலுள்ள பழைமையான மொழிகளில் இதிகாசங்களும் காப்பியங்களும் தோன்றியுள்ளன.
இந்தியாவில் வடமொழியில் (சமஸ்கிருதம்) எழுதப்பட்ட இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம்.
தமிழ்மொழியில் எழுதப்பட்ட இதகாசங்கள் கம்பராமாயணம், வில்லிபாரதம்.
கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி.
தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை. இரு காப்பியங்களுமே பெண்ணுக்கு முதன்மை தருகின்றன.
பிறமொழி இதிகாசங்கள் போரினை முதன்மைப்படுத்தின. தமிழ்க் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.

## ஐம்பெருங்காப்பியங்கள்

**ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு**

**"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்"** – திருத்தணிகையுலா

பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை உறுதிப்பொருள்களும் அமைந்து காணப்படுவன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | திருத்தக்கத்தேவர் |
| வளையாபதி | அறியப்படவில்லை |
| குண்டலகேசி | நாதகுத்தனார் |

❖ 'பொருட்தொடர்நிலைச் செய்யுள்' காப்பியம் எனப்படும்.
❖ காப்பிய இலக்கணம் குறித்து கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும்.
❖ 'ஐம்பெருங்காப்பியங்கள்' என்ற சொற்றொடரை முதன்முதலில் கூறியவர் மயிலைநாதர்.
❖ ஐம்பெருங்காப்பியங்களின் நூல் பெயர்களை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் கந்தப்ப தேசிகர்.

**"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும்
கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும்
சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும்
பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடுவாழ்க"** – யோகி சுத்தானந்தபாரதி

**ஐம்பெருங்காப்பியங்கள் :**

| நூல் | சமயம் | பாவகை |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | சமணம் | நிலைமண்டில ஆசிரியப்பா, கொச்சகக் கலிப்பா |
| மணிமேகலை | பௌத்தம் | நிலைமண்டில ஆசிரியப்பா |
| சீவகசிந்தாமணி | சமணம் | விருத்தம் |
| வளையாபதி | சமணம் | விருத்தம் |
| குண்டலகேசி | பௌத்தம் | விருத்தம் |

❖ தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக்கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. ஏனையவை வடமொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ அமைந்துள்ளன.
❖ ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்கள் அணிகலன்களின் பெயரால் அமைந்துள்ளன.

**சிலப்பதிகாரம்** – 'சிலம்பு' என்பது மகளிர் காலில் அணியும் ஆபரணம். கண்ணகியின் சிலம்பால் உருவான வரலாறு ஆகும்.

**மணிமேகலை** – ஆடை நழுவாமலிருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி. இத்தொடர் அன்மொழித்தொகையாக, அதனை அணிந்த பெண்ணை உணர்த்தும்.

**குண்டலகேசி** – குண்டலம் என்பது மகளிர் காதில் அணியும் அணி. 'கேசி' என்றால் அழகான கூந்தலை (கேசம்) உடையவள்.

**வளையாபதி** – வளையல் என்பது பெண்கள் கைகளில் அணியும் அணி. வளையாபதியின் வரலாற்றைக் கூறும் நூல்.

**சீவகசிந்தாமணி** – சிந்தாமணி என்பது அரசன் முடியில் (கிரீடத்தில்) பதிக்கப்படும் மணிக்கல். சீவகனை மணிமுடியாக்கி எழுதப்பட்ட வரலாறு.

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.

### 1. சிலப்பதிகாரம்

❖ சிலம்பு + அதிகாரம் ⟶ சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த நிகழ்வை முதன்மையாகக் கொண்டதால் சிலப்பதிகாரம் என்று பெயர் பெற்றது.

**நூலமைப்பு**

காண்டங்கள் ⟶ 3 (புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்)
காதைகள் ⟶ 30
புகார்க்காண்டம் ⟶ 10 காதைகள்
மதுரைக்காண்டம் ⟶ 13 காதைகள்
வஞ்சிக்காண்டம் ⟶ 7 காதைகள்
அடிகள் ⟶ 5001

**உரைகள்**

அரும்பதங்களுக்கு மட்டும் அரும்பத உரைகாரர்.
அடியார்க்கு நல்லாரின் உரை.
ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை.

❖ 'காதை' என்றால் கதை தழுவியப் பாட்டு என்று பொருளாகும்.
❖ பாவகை நிலைமண்டில ஆசிரியப்பா

**புகார்க்காண்டம்**

❖ முதல்காதை – மங்கல வாழ்த்துப்பாடல்
பத்தாவது காதை – நாடுகாண்காதை

**மதுரைக்காண்டம்**

❖ 11–ஆவது காதை – காடுகாண்காதை
23–ஆவது காதை – கட்டுரைக்காதை

**வஞ்சிக்காண்டம்**

❖ 24–ஆவது காதை – குன்றக்குரவைகாதை
30–ஆவது காதை – வரந்தருகாதை



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**காப்பியம் தோன்றிய காலம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எடுத்து விழாக் கொண்டாடியபோது இலங்கை மன்னன் கயவாகு உடனிருந்தான் என்பதை இளங்கோவடிகள் வரந்தரு காதையில் கூறியுள்ளார். கயவாகு மன்னனின் ஆட்சி கி.பி. 2–ஆம் நூற்றாண்டு என இலங்கை சரித்திரமாகிய மகாவம்சம் கூறுகிறது.

**சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் :**

| | |
|---|---|
| **முத்தமிழ்க்காப்பியம்** | இயல், இசை, நாடகம் என்கிற முத்தமிழும் விரவி பெற்றதால் இப்பெயர் பெற்றது. |
| **உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள்** | பாடல்களின் இடையிடையே உரைநடையும் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது. |
| **இயல், இசை, நாடகப் பொருட் தொடர்நிலைச் செய்யுள்** | இசை, நாடக வெண்பாக்கள் நிறைந்து வருவதால் இப்பெயர் பெற்றது. |
| **குடிமக்கள் காப்பியம்** | சிலப்பதிகாரத் தலைவனும், தலைவியும் சாதாரண குடிமக்கள் என்பதால் இப்பெயர் பெற்றது. (கூறியவர் தெ.பொ. மீ) |
| **ஒற்றுமைக்காப்பியம்** | தமிழின ஒற்றுமையையும் சமய ஒன்றுமையையும் வலியுறுத்துவதால் இப்பெயர் பெற்றது. |
| **சிலப்பதிகாரம்** | சிலம்பதிகாரம் என்பதை உ.வே.சா. சிலப்பதிகாரம் என மாற்றினார். பைந்தமிழ்க் காப்பியம், மூவேந்தர் காப்பியம், பத்தினிக்காப்பியம், முதன்மைக்காப்பியம், தமிழ்த்தேசியக் காப்பியம். |

**நூல் தோன்றக் காரணம்**

❖ சேரன் செங்குட்டுவன், புலவர் சீத்தலைச் சாத்தனாரோடும், இளங்கோவடிகளோடும் மலைவளம் காண வந்தான்.
❖ அங்கு வாழ்ந்த மலைவாழ் மக்கள், அங்கிருந்த வேங்கை மரத்தின் கீழ் ஒரு பெண் தெய்வத்தைப் பார்த்ததாகக் கூறினர்.
❖ மேலும், தேவர்கள் சூழ்ந்து வர, விண்ணிலிருந்து ஒரு விமானம் இறங்கி வந்து அவளை விண்ணுலகு அழைத்துச் சென்றதாகவும் அதைத் தம் கண்களால் கண்டதாகவும் அம்மக்கள் கூறினர்.
❖ உடனிருந்த பெரும்புலவர் சீத்தலைச் சாத்தனார் 'அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்' என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.

**நூலின் சிறப்புகள்**

❖ இஃது ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானதாகும். தமிழிலேயே முதன்முதலாக இயற்றப்பட்ட காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.
❖ இந்நூலின் சிறப்பு 'மூன்று' ஆகும்.
❖ சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தர்களின் சிறப்பு. புகார், மதுரை, வஞ்சி என்ற மூன்று நகரங்களின் சிறப்பு.ஞாயிறு, திங்கள், மழை என்ற மூன்று இயற்கைத் தெய்வங்களின் சிறப்பு.
❖ செங்கோலின் சிறப்பு, கற்பு மேம்பாடு, ஊழ்வினை பயன் என்ற மூன்று உண்மைகள்.
❖ இந்நூல் மூலமாக தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களின் பெருமைகளையும், பண்டைத் தமிழரின் அரசியலையும் பழக்கவழக்கங்களையும், நாகரிகங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**நூல் உணர்த்தும் உண்மைகள் - (3)**

**"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"**
**"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்"**
**"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"**

❖ முதல் உண்மை அரசியலில் பிழை செய்த மன்னனைக் குறிக்கிறது.
❖ இரண்டாம் உண்மை கண்ணகியைக் குறிக்கிறது
❖ மூன்றாம் உண்மை கோவலனைக் குறிக்கிறது.

**முக்கியக் கதாபாத்திரங்கள்**

❖ கோவலனின் தந்தை மசாத்துவான் ; கண்ணகியின் தந்தை மாநாய்கன்.
❖ கோவலனின் தோழன் மாடலன் ; கண்ணகியின் தோழி தேவந்தி.
❖ மாதவியின் தோழி சுதமதி, வயந்தமாலை.
❖ கோவலன், கண்ணகியை வழிநடத்திச் சென்ற கவுந்தியடிகள். கோவலன் கண்ணகிக்கு மதுரையில் அடைக்கலம் கொடுத்த மாதரி.
❖ 'மண்தேய்த்த புகழினான்' என்று கோவலனை சிறப்பித்து இளங்கோவடிகள் எழுதியுள்ளார்.

**மேற்கோள்கள்**

❖ 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே
காசறு விரையே, கரும்பே, தேனே"
❖ 'பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள'
❖ 'காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?
❖ 'தேரா மன்னா! செப்புவது உடையேன்';
❖ 'கன்றிய கள்வன் கையது ஆகின்,
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு'

**பாராட்டுரைகள்**

**'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' - என்றோர்
மணியாரம் படைத்த தமிழ்நாடு** – பாரதியார்

**'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை'** – பாரதியார்

**'முதன்முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள்'** – மு.வரதராசனார்

**'தேனிலே ஊறிய செந்தமிழின்
சுவை தேறும் சிலப்பதிகாரம்'** – கவிமணி

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு**

நூலாசிரியர் – இளங்கோவடிகள்
இயற்பெயர் – குடக்கோசேரல்
நாடு – சேரநாடு
தந்தை – இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
தாய் – நற்சோணை (சோழநாட்டு இளவரசி)
தமையன் – சேரன் செங்குட்டுவன்
சமயம் – சமணம் (அவர் ஏற்றுக்கொண்ட மதம்)
காலம் – கி.பி. 2–ஆம் நூற்றாண்டு
சமகாலப்புலவர் – மணிமேகலையின் ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார்
துறவு பூண்டதன் காரணம் – இளையவரான இளங்கோவே நாடாள்வார் எனக் கணியன் (சோதிடன்) கூறிய கருத்தைப் பொய்யாக்கும் வண்ணம், இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.

**நூலாசிரியரின் சிறப்புகள்**

❖ இவர் அரசியல் வேறுபாடு கருதாதவர். சேர நாட்டைச் சேர்ந்தவராயினும் சோழ, பாண்டிய மன்னர்களைத் தம் நூலில் உயர்த்திக் கூறியுள்ளார்.
❖ இவர் சமய வேறுபாடற்ற துறவி. இவர் சமண மதத்தைச் சார்ந்திருந்தாலும் பிற மதங்களைப் பழித்துக் கூறாதது இவருடைய சிறப்பாகும்.
❖ இளமையிலேயே துறவு பூண்டமையால், தம் தமையனிடம் அவர் கொண்டிருந்த பேரன்பும், அரசப்பதவி மீதிருந்த பற்றற்ற தன்மையும் விளங்குகிறது.

**சேரன் செங்குட்டுவன் :** கண்ணகிக்காக கோயில் கட்டுவதற்கு இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்தார். வட இந்திய மன்னர்களான கனக, விசயர்கள் மீது போர் தொடுத்து வெற்றி கண்டு அவர்கள் தலை மீது கல்லை சுமக்க வைத்து கொண்டு வந்து பத்தினி தெய்வத்திற்கு கோயில் கட்டினார். கோயில் அமைந்துள்ள இடம் திருவஞ்சிக்களம் ஆகும்.



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

## 2. மணிமேகலை

மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். கோவலன்–மாதவி ஆகியோரின் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் காப்பியமாதலால் இப்பெயர் பெற்றது.

மணிமேகலையும், சிலப்பதிகாரமும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே இவை 'இரட்டைக் காப்பியங்கள்' என வழங்கப் பெறுகின்றன.

**நூற்குறிப்பு**

- ❖ இந்நூலில் காண்டப்பிரிவு இல்லை.
- ❖ 30 காதைகள் மட்டும் உள்ளன
- ❖ முதல் காதை–விழாவறைக் காதை
- ❖ இறுதிக் காதை–பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை.
- ❖ அடிகள்–4755
- ❖ பாவகை – நிலைமண்டில ஆசிரியப்பா
- ❖ சமயம்–பௌத்தம்

**நூலின் வேறு பெயர்கள்**

மணிமேகலைத் துறவு, அறக்காப்பியம், சீர்திருத்தக் காப்பியம், குறிக்கோள் காப்பியம், முதல் சமயக் காப்பியம், புரட்சிக் காப்பியம், பசிப்பிணி மருத்துவக் காப்பியம், சமயக்கலைச் சொல்லாக்கக் காப்பியம், கதை களஞ்சியக் காப்பியம்.

**முக்கியக் கதாப்பாத்திரங்கள்**

மணிமேகலையின் தோழி **சுதமதி.** புத்தத்துறவி **அறவண அடிகள்.** மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சையிட்ட **ஆதிரை, பசிநோயால் துன்பமுற்ற காயசண்டிகை,** மணிமேகலை அமுதசுரபியைப் பெற உதவிய **தீவதிலகை.**

கோவலன் மாதவியின் மகளான மணிமேகலை தன்னை மணம் செய்ய விரும்பிய அரசகுமாரன் உதயகுமாரனிடம் இருந்து தப்பிக்க அங்குள்ள பளிக்கறையில் மறைந்து கொள்கிறாள். அங்கிருந்த மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத் தீவிற்கு வான் வழியே அழைத்துச் செல்கிறது. அங்கு தன் பழம் பிறப்பை அறிந்து கொள்ளும் மணிமேகலை பசியற்றிருக்கவும், விரும்பும் உருவம் எடுக்கவும், வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களை மணிமேகலா தெய்வத்திடமிருந்து தெரிந்து கொள்கிறாள். மேலும் அங்கு புத்தபீடிகையை காவல் செய்து வரும் தேவதையான தீவதிலகையின் உதவியால் 'கோமகி' (கோ–பசு; முகி–முகம்; பசுவின் முகம் போன்ற வடிவமுடைய) என்ற பொய்கையில் வைகாசித் திங்கள் முழுநிலா நாளில் ஆபுத்திரன் கையிலிருந்த 'அமுதசுரபி' என்ற பாத்திரத்தைப் பெறுகிறாள்.

அந்தப் பாத்திரத்தில் இட்ட உணவு அள்ள அள்ளக் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்கும். அப்பாத்திரத்துடன் புகார் நகரம் வந்து காயசண்டிகையின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன் முதல் பிச்சையேற்றாள் அதன் மூலம் பசிப்பிணி நீக்கும் அறப்பணியை மேற்கொண்டாள். மேலும் அந்நாட்டில் சிறையிலிருந்த குற்றவாளிகளைத் திருத்தி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினாள்.

**மேற்கோள்கள் :**

- ❖ வினையின் வந்தது வினைக்கு விளைவாது புனைவன நீக்கின் புலால் புறத்து இடுவது மூப்பு விளி உடையது தீப்பிணி இருக்கை'
- ❖ 'கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும், கோள்நிலை திரிந்திடின் மாரிவளம் குன்றும்'
- ❖ 'பசிப்பிணி என்னும் பாவி'
- ❖ 'மண்திினி ஞாலத்து வாழ்க்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'
- ❖ 'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா'
- ❖ 'அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள்; மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்லென காவலன் உரைக்கும்'.

**பிற செய்திகள்**

- ❖ மணிமேகலை பிறந்த ஊர் பூம்புகார்.
- ❖ மணிமேகலை மறைந்த ஊர் காஞ்சிபுரம்.
- ❖ கோவலனின் குலதெய்வம் மணிமேகலை. அதனால் மணிமேகலைக்கு அப்பெயர் இடப்பட்டது.
- ❖ இரட்டை காப்பியத்துள் கிளைக்கதைகள் மிகுந்த நூல் மணிமேகலை.
- ❖ இரட்டை காப்பியத்துள் பிறமொழி கலப்பு மிகுந்த பிறமொழிச் சொற்களை இந்நூலாசிரியர் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.
- ❖ சிலப்பதிகாரத்தின் இறுதியில் 'மணிமேகலை மேல் உரைபொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' எனக் கூறப்படுவதால் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது.
- ❖ மணிமேகலையை சாத்தனார், இளங்கோவடிகள் முன்னிலையில் அரங்கேற்றினார்.
- ❖ கதைத்தலைவியின் பெயரால் அமைந்த முதல் காப்பியம் மணிமேகலை.
- ❖ தொல்காப்பியர் கூறிய எட்டு அணிகளுடன் மடக்கணி, சிலேடையணி இரண்டையும் பயன்படுத்திய முதல் காப்பியம் மணிமேகலை.
- ❖ திருவள்ளுவரை 'பொய்யில் புலவன்' எனவும் திருக்குறளைப் 'பொருளுரை' என்றும் முதலில் கூறிய காப்பியம்.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | சீத்தலைச் சாத்தனார் |
| இயற்பெயர் | : | சாத்தன் |
| பிறந்த ஊர் | : | திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த 'சீத்தலை' |
| வாழ்ந்த ஊர் | : | மதுரை |
| தொழில் | : | கூலவாணிகம் (கூலம் – தானியம்) |
| காலம் | : | கி.பி.2–ஆம் நூற்றாண்டு |
| சமகாலப் புலவர் | : | இளங்கோவடிகள் |
| சமயம் | : | பௌத்தம் |
| சிறப்புப் பெயர்கள் | : | தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன் (இளங்கோவடிகள் பாராட்டியது) |

**இந்நூலில் கூறப்பட்டுள்ள மூன்று கருத்துகள்**

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை.

**உரைகள்**

- ❖ மணிமேகலையின் முதல் 26 காதைகளுக்கு ந.மு. வேங்கடசாமி நாட்டாரும். இறுதி 4 காதைகளுக்கு ஔவை துரைசாமிப் பிள்ளையும் உரையெழுதியுள்ளனர்.

## 3. சீவகசிந்தாமணி

- ❖ இந்நூல் சீவகன் என்னும் அரசனின் வரலாற்றை விவரித்துக் கூறுவதால் 'சீவகசிந்தாமணி' என்னும் பெயர் பெற்றது.
- ❖ சிந்தாமணி, தேவர் உலகத்தில் உள்ள ஒப்பற்றதொரு மணி என்பர். அது வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றையெல்லாம் தர வல்லது. அந்த மணியைப்போல் இந்நூலும் அறிஞர் வேண்டும் பொருள்களையெல்லாம் தர வல்லது. ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர்.
- ❖ 'நெஞ்சின்கண் பொதிந்து வைத்தற்குரிய சிறப்புடைய ஒரு மணி' என்பதால் இப்பெயர் பெற்றது என்பர்.
- ❖ மேலும் சீவகனைப் பெற்ற தாயாகிய விஜயை அவனைச் சீராட்டும் போது 'சிந்தாமணியே' என்றும் அன்புடன் அழைத்தமையால், அப்பெயரே சிந்தாமணி என நூற்பெயரால் அமைந்தது என்றும் கூறுவர்.

**நூலின் வேறுபெயர்கள்**

சீவகன் எட்டுப் பெண்களை மணந்து இன்புற்று வாழ்ந்த மண நிகழ்ச்சிகளைச் சுவைபட விளக்குவதால் இது 'மணநூல்' எனவும் வழங்கப்பெறும். முக்திநூல், காமநூல், மறைநூல், முடிபொருள் தொடர்நிலைச் செய்யுள் (அடியார்க்கு நல்லார்), இயற்கை தவம், முதல் விருத்தப்பா காவியம் (விருத்தப்பாவினால் அமைந்த முதற்பெருங்காப்பியம்), சிந்தாமணி, தமிழ் இலக்கிய நந்தாமணி.

**நூலமைப்பு முறை**

| | | |
|---|---|---|
| பாவகை | – | விருத்தப்பா |
| இலம்பகம் (பிரிவு) | – | 13 |
| பாடல்கள் | – | 3145 |

முதல் இலம்பகம் – நாமகள் இலம்பகம்
இறுதி இலம்பகம் – முக்தி இலம்பகம்

**பிற செய்திகள்**

- ❖ சைவரான அநபாயச் சோழன் விரும்பிக்கற்ற காப்பியம்.
- ❖ உ.வே.சா. பதிப்பித்த முதல் காப்பியம்.
- ❖ கிறித்துவரான ஜி.யூ. போப் இந்நூலை, 'தமிழில் உள்ள இலக்கியச் சின்னங்களுள் மிக உயர்வானது. தமிழ்மொழியின் இலியதும் ஒடிசியுமான புதிய பெரிய இக்காப்பியம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்று' எனப் பாராட்டியுள்ளார்.
- ❖ இந்நூல் செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களுள் ஒன்றாகும் என ஜி.யூ. போப் பாராட்டியுள்ளார்.
- ❖ இந்நூல் மதுரை பாண்டிய மன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டது. திருத்தக்கத்தேவர் இந்நூலுக்கு 'சிந்தாமணியின் சரிதம்' என்றே பெயரிட்டார்.
- ❖ வடமொழியிலுள்ள க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீபுராணம் ஆகிய நூல்களிலுள்ள கதையைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டது.
- ❖ இந்நூல் சமண சமய நூலாகும்.
- ❖ இந்நூலை திருத்தக்கத்தேவர் எட்டே நாட்களில் இயற்றினார்.
- ❖ கம்பர், 'சிந்தாமணியிலும் ஓர் அகப்பை முகந்து கொண்டேன்' என்று கூறியுள்ளார்.
- ❖ நச்சினார்க்கினியர் சைவராக இருந்தும் சீவகசிந்தாமணிக்கு இருமுறை உரை எழுதியதாகக் கூறப்படுகிறது. 'தமிழ் மல்லி நாதசூரி' என்றும் 'உச்சிமேற்கொள் புலவர்' என்றும் பாராட்டப்பட்ட நச்சினார்க்கினியர் கொண்டுகூட்டி பொருள் உரைப்பதில் வல்லவர்.

**மேற்கோள்கள்**

❖ 'இவ்வாறாகப் பிறப்பதுவோ
இதுவோ மன்னற்கு இயல் வேந்தே'

❖ 'மெய்வகை தெரிதல் தம்மை
விளங்கிய பொருள்கள் தம்மை
பொய்வகை இன்றித்தேறல் காட்சி
ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயாது
ஒழுகுதல் ஒழுக்கம், மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினையும் கழியும் என்றான்'.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு**

ஆசிரியர் – திருத்தக்கத்தேவர்
சமயம் – சமணம்
காலம் – 10–ஆம் நூற்றாண்டு எனவும் 9–ஆம் நூற்றாண்டு எனவும் மாறுபாடான கருத்துகள் உள்ளன.
சமயம் – சமணம்
வேறு பெயர்கள் – திருத்தகு முனிவர், திருத்தகு மாமுனிவர், தேவர்.
இயற்றிய மற்றொரு நூல் – நரிவிருத்தம்

- ❖ இவர் சோழ வேந்தர் என்பது உரையாசிரியர் குறிப்பால் அறிய முடிகிறது.
- ❖ இவர் வடமொழி மற்றும் தென்மொழிகளில் வல்லவராய் இருந்தார். இளமையிலேயே துறவு பூண்டு விளங்கினார்.
- ❖ ஒருமுறை இவர் மதுரை சென்றிருந்த பொழுது அங்கிருந்த தமிழ்ப் புலவர்கள் சமணத் துறவியர்களுக்கு இன்பப் பொருளில் நூல் இயற்றும் திறன் இல்லை என்று கூறியதால், அக்கூற்றைப் பொய்யாக்குவதற்காக இந்நூலை திருத்தக்கத்தேவர் இயற்றினார்.
- ❖ இவரைப் பற்றிய குறிப்புகள் கர்நாடக மாநிலம் சிரவணபெலகுலா கோயில் கல்வெட்டில் உள்ளன.
- ❖ வீரமாமுனிவர் திருத்தக்கத்தேவரை 'தமிழ்க்கவிஞர்களுள் இளவரசன்' எனப் புகழ்ந்துள்ளார்.

## 4. குண்டலகேசி

ஆசிரியர் – நாதகுத்தனார்
காலம் – கி.பி. 9–ஆம் நூற்றாண்டு
பாடல்கள் – 224 மட்டுமே கிடைத்துள்ளன
பாவகை – விருத்தம். இந்நூல் பௌத்த நூலாகும்.
நூலின் வேறு பெயர்கள்– குண்டலகேசி விருத்தம், அகலகவி

**பிற செய்திகள்**

- ❖ சமண சமயத்தை எதிர்த்து எழுந்த நூல் இது.
- ❖ புறத்திரட்டு, நீலகேசி உரை முதலியவற்றால் 224 பாடல்கள் கிடைத்துள்ளன.
- ❖ தன்னைக் கொல்ல முயன்ற கணவனைக் கொன்றுவிட்டு பௌத்த துறவியாகி அச்சமயத்தின் பெருமையைப் பரப்பிய குண்டலகேசி என்னும் வணிகர் குலப் பெண்ணின் கதையாகும்.

## 5. வளையாபதி

- ❖ இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
- ❖ இந்நூல் 9–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
- ❖ இந்நூல் சமண சமய நூலாகும்.
- ❖ இந்நூலின் பாவகை 'விருத்தப்பா' ஆகும்.
- ❖ இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 72 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
- ❖ புகார் நகரில் வாழ்ந்த நவகோடி நாராயணன் என்ற வணிகனின் கதை பற்றி இந்நூல் கூறுகிறது.
- ❖ இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்.
- ❖ வளையாபதியின் கதையை வைசிய புராணம் கூறுகிறது.
- ❖ விருத்தப்பாக்களால் அமைந்துள்ள இந்நூல் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை குறித்துப் பேசுகிறது.

## ஐஞ்சிறுகாப்பியங்கள்

- ❖ பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நால்வகை உறுதிப் பொருள்களில் ஒன்றோ அல்லது பலவோ குறைந்து காணப்படுவது சிறுகாப்பியம் ஆகும்.
- ❖ ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள்
- ❖ ஐஞ்சிறுகாப்பியங்கள் இலக்கணம் கூறும் நூல் தண்டியலங்காரம்.
- ❖ ஐஞ்சிறுகாப்பியங்கள் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.

| நூல் | சமயம் | பாவகை | ஆசிரியர் |
|---|---|---|---|
| சூளாமணி | சமணம் | விருத்தம் | தோலாமொழித்தேவர் |
| நீலகேசி | சமணம் | விருத்தம் | அறியப்படவில்லை |
| நாககுமார காவியம் | சமணம் | விருத்தம் | அறியப்படவில்லை |
| உதயணகுமார காவியம் | சமணம் | விருத்தம் | அறியப்படவில்லை |
| யசோதர காவியம் | சமணம் | விருத்தம் | அறியப்படவில்லை |

## 1. சூளாமணி

ஜீனசேனர் என்பவர் வடமொழியில் எழுதிய ஸ்ரீபுராணம் எனப்படும் ஆருகத மகாபுராணத்தைத் தழுவி தமிழில் ஆக்கப்பட்ட நூல் இது.

சூளாமணியின் ஆசிரியர் தோலாமொழித்தேவர் ஆவார். இவரின் இயற்பெயர் வர்த்தமான தேவர்.

காலம் – கி.பி. 10–ஆம் நூற்றாண்டு
பாடல்கள் – 2330
சருக்கம் – 12

**நூலின் பெயர்க்காரணம்**

- ❖ மிகுந்த ஒளியையும் சிறப்பினையும் உடையது சூளாமணி. ஆற்றல்கள் சிறப்புகளும் கொண்டு திவிட்டனும் விசயனும் சூளாமணி போல்